## நாரம்மல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 03 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாரம்மல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 1,592,677 பெறுமதியான 09 சொத்து விடயங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,439,760 தொகையாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,960,220 தொகை ஆகும். அவற்றில் அண்மித்த 0.78% என ரூபா 179,841 தொகை ஒன்று 3 வருடங்களை விட கூடிய காலம் முதல் காணப்படும் மீதிகளாகும். இது தவிர இரண்டு வருட காலத்தை மிகைத்துள்ள அலவ்வ பிரதேச சபைக்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 187,674 இற்கான மீதி ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

வாடகை வருமானம் ரூபா 11,337,348 தொடர்பான பட்டோலைப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த கணக்கு விடயங்கள் பற்றி திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 6,344,445 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,293,799 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,050,646 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 38,491,790 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 41,972,786 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 2,863,449 இற்கான மிகை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 77,856,088 தொகையில் பொதுவாக நூற்றிற்கு 66.99 தொகை என ரூபா 52,159,149 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 38,491,790 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 71,511,643 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 56.93 என ரூபா 40,712,936 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 85.49 ஆகிய ரூபா 34,808,098 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மூலதனச் செலவு ஆகிய ரூபா 41,972,786 தொகையில் அண்மித்த சுமார் நூற்றிற்கு 8.29 என ரூபா 3,480,996 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் அண்மித்த மீதியான நூற்றிற்கு 91.71 ஆகிய ரூபா 38,491,790 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வாடகை

----------------

வியாபார நிலைய வாடகை பட்டோலையின் பிரகாரம் 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 67,100 இற்கான மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 144,270 தொகை என அண்மித்த நூற்றிற்கு 215 இனால் அதிகரித்திருந்தது.

2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செலயாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 367,410 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 5,825,675 வும் ஆகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------

ரூபா 275,500 கிரயத்தையுடைய இரண்டு கொங்கிரீட் அச்சுக்கள் இயந்திரங்கள் மற்றும் ரூபா 580,260 கிரயத்தை உடைய இலக்கம் 49-7824 கொண்ட போட் டிரக்டர் வண்டி என்பன மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்